இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 266 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 24 – புதன்கிழமை 07 மே 2025 – கோவை ★★ 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 266 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 24 - Wednesday 07 May 2025 - Kovai ★★ 28 Pages ₹5.00




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.5.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கொண்டாடப்படும் "தமிழ் வார விழா" நிறைவு விழாவில், தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் கவிக்கோ அப்துல் ரகுமான், எழுத்தாளர் மெர்வின், ஆ. பழநி ஆகியோர்களின் நூல்கள் நாட்டுடைமை செய்து அவர்களின் மரபுரிமையினருக்கும், கொ.மா. கோதண்டம் மற்றும் புலவர் இலமா தமிழ்நாவன் ஆகியோர்களின் நூல்கள் நாட்டுடைமை செய்து அவர்களுக்கும் நூலுரிமைத் தொகையாக தலா 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை வழங்கினார். இந்நிகழ்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு. மகேஷ்குமார், இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொஹிதீன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) திருமதி கவிதா ராமு, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ந. அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும், மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்று முழங்கிய

## பாவேந்தர் பாரதிதாசன் நினைவைப் போற்றும் வகையில்

# முதல்வர் மு.க.ஸ்டாலினால் அறிவிக்கப்பட்ட "தமிழ் வார விழா" நிறைவு நாள்!

## முதலமைச்சர் பங்கேற்று நூலுரிமைத் தொகையினை வழங்கினார்!

**சென்னை, மே 7 -**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.5.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கொண்டாடப்படும் "தமிழ் வார விழா" நிறைவு விழாவில், 5 சிறந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள் நாட்டுடைமை யாக்கப்பட்டு அதற்கான நூலுரிமைத் தொகையாக தலா 10 இலட்சம் ரூபாய்க் கான காசோலைகள் மற்றும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாண வியர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.**

"பாவேந்தர்" பாரதிதாசன் அவர்கள் தமது இளம் வயதிலிருந்தே தமிழ்மொழி மீது தணியாத தாகமும் பற்றும் கொண்டி ருந்தார். மகாகவி பாரதியார் அவர்கள் புதுவையில் தங்கியிருந்தபோது, அவரு டன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். பாரதியாரின் கவிதைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டு அவர் போலவே இனிய கவிதைகளை எழுதினார். பாரதியார் அவர்களைத் தம் வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டு, பாரதிதாசன் எனத் தம் பெய ரையே மாற்றிக் கொண்டார்.

பாரதிதாசன் அவர்கள், தமிழாசிரியர், தமிழ்க் கவிஞர், திரைக்கதை ஆசிரியர், எழுத்தாளர் என்று பல்வேறு துறைகளில் தமிழ்மொழியின் இனிமையை மக்களி டம் எடுத்துச் சென்றவர். பாவேந்தர் பாரதி தாசன் அவர்கள் 86க்கும் மேற்பட்ட நூல் கள், கதைகள், கட்டுரைகளைப் படைத்துள்ளார். அவரது 'பிசிராந்தையார்' நாடகத்திற்காக 1970ஆம் ஆண்டு 'சாகித் திய அகாடமி விருது', வழங்கப்பட்டது.

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும், மங்காத தமிழென்று சங்கே முழங்கு', "தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" போன்ற பல்வேறு காலத்தால் அழியாத பாடல்களை படைத்துள்ளார். தம் படைப்பாற்றல் மூலம் தமிழுக்குப் பல வழிகளில் தொண்டாற்றி, தமிழ் இனத் திற்கு எழுச்சியூட்டிய பாவேந்தர் பாரதி தாசன் அவர்கள் 1964ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

**சட்டப்பேரவையில் முதல்வர் அறிவிப்பு!**

தமிழ் மொழியின், தமிழ் இனத்தின் சிறப்பை உலகிற்கு எடுத்துரைத்த பாவேந் தர் பாரதிதாசன் அவர்களை சிறப்பிக்கும் வகையில், முதலமைச்சர் அவர்கள் 22.4.2025 அன்று சட்டமன்ற பேரவை யில், விதி எண்.110ன் கீழ், '**பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஏப்ரல் 29 முதல் மே 5 வரை தமிழ் வார விழா கொண்டாடப்படும்**' என வும், இவ்விழாவில் கவியரங்கங்கள் மற்றும் இலக்கிய கருத்தரங்குகள், பாரதிதாசன் இளம் படைப்பாளர் விருது, தமிழ் இலக்கியம் போற்றுவோம், பள்ளி களில் தமிழ் நிகழ்ச்சிகள், தமிழ் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் கொண்டாடப் படும் என்று அறிவித்தார்.

அதன்படி, இவ்விழாவினை சிறப்பாக நடத்திட தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையால் 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக் கீடு செய்யப்பட்டது. தமிழ் வளர்ச்சி மற் றும் செய்தித்துறையின் வழிகாட்டுதலின் அடிப்படையில், தமிழ் வளர்ச்சித்துறை, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, கலை பண்பாட்டுத்துறை என பல்வேறு அரசு துறைகள் இணைந்து இவ்விழா வினை 29.4.2025 முதல் 5.5.2025 வரை தமிழ்நாடு முழுவதும் நடத்திட

தொடர்ச்சி 4– ஆம் பக்கம்

## ஒவ்வொரு நாளும் அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்க்கையிலும் விடியலை ஏற்படுத்தும் அரசு இது!

# மே.5 - வணிகர் நாளாக அரசாணை வெளியிடப்படும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – வணிகர் தின விழாவில் அடுக்கடுக்கான அறிவிப்புகளை வெளியிட்டு உரை!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.5.2025) மதுராந்தகத்தில், 42–வது வணிகர் தினத்தையொட்டி, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் சார்பில் நடைபெற்ற வணிகர் கோரிக்கை பிரகடன மாநாட்டில், பேருரையாற்றினார். இம்மாநாட்டில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் கே.சுந்தர், இ.கருணாநிதி, பிரபாகரராஜா, ரூபி மனோகர், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாநிலத் தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா, பொதுச் செயலாளர் வி. கோவிந்தராஜுலு, பொருளாளர் ஏ.எம். சதக்கத்துல்லா மற்றும் வணிகர் சங்க பேரமைப்பின் நிருவாகிகள் உடனிருந்தனர்.

**மதுராந்தகம், மே 7 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (5.5.2025) மதுராந்தகத்தில், 42-வது வணிகர் தினத்தை யொட்டி, தமிழ்நாடு வணிகர் சங் கங்களின் பேரமைப்பின் சார்பில் நடைபெற்ற வணிகர் கோரிக்கைப் பிரகடன மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் "மே 5 - வணிகர் நாள் என அர சாணை விரைவில் வெளியிடப்ப டும்" என்று அறிவித்தார்.**

**இம்மாநாட்டில் முதல்வர் அவர் கள் ஆற்றிய உரை வருமாறு:-**

மதுராந்தகத்திற்குள் தமிழ் நாடே கூடியிருக்கிறதா என்று வியப்படைகின்ற வகையில், இந்த மாநாட்டை மிகுந்த எழுச்சியோடு, ஏற்றத்தோடு, சிறப்போடு ஏற்பாடு செய்திருக்கின்ற தமிழ்நாடு வணி கர் சங்கங்களின் பேரமைப்பின் மாநிலத் தலைவர் நம்முடைய அருமைச் சகோதரர் விக்கிரமராஜா அவர்களை நான் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

**அன்போடும் உரிமையோடும் பழகக்கூடியவர் விக்கிரமராஜா!**

நம்முடைய விக்கிரமராஜா அவர்களைப் பற்றி சொல்ல வேண் டும் என்று சொன்னால், இது போன்ற மாநாடுகளை மட்டுமல்ல, வணிகர்களுக்கான நலன்களை யும் பிரமாண்டமாகக் செய்யக் கூடியவர் நம்முடைய விக்கிரம ராஜா அவர்கள்.

அவர் சொன்னார் - நான் அவ ரிடத்தில் பாசத்தோடு, அன்போடு, உரிமையோடு இருப்பதுபோல் அவரும் அதே உணர்வோடு பழ குகிறார். இது உங்கள் மீது நான் வைத்திருக்கக்கூடிய அன்பின் அடையாளம் என்று எடுத்துச் சொன்னார். உண்மைதான். அது ஒரு பக்கம் இருந்தாலும், உங்கள் மேல் அவர் வைத்திருக்கின்ற அக் கறையால்தான், அவர் மேல் நீங் கள் இந்த அளவுக்கு அன்பையும், பாசத்தையும் பொழிந்து கொண்டி ருக்கிறீர்கள். அதுவும் உண்மை.

**வணிகர்களுக்கு ஒரு பிரச் சினை என்று சொன்னால், முதல் ஆளாக ஓடோடி வந்து நிற்பார்;**

தொடர்ச்சி 4– ஆம் பக்கம்